2022 ஏப்ரல் 19]

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பின்பு, அவர்களுக்கு வழங்கப்படுகின்ற ஊதியங்கள்கூட அவர்களுடைய வங்கிக் கணக்கில் சேருவதை நாங்கள் உத்தரவாதப்படுத்தியிருக்கின்றோம். இப்போது அந்தப் பணியாளர்கள் எல்லாம் உண்மையிலேயே மிகுந்த மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். ஏனென்றால், அவர்களுடைய ஊதியம் எவ்வளவு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ, அது தெளிவாக அவர்களுடைய வங்கிக் கணக்கில் சென்றடைகிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருப்பதைப்போன்று, அந்தப் பணியாளர்கள் எங்கேயாவது குறைவாக இருக்கின்றார்கள் என்று சொன்னால், நாங்கள் நிச்சயமாக ஆய்வுக் கூட்டம் நடத்துகின்ற நேரத்தில் அதைக் கண்டறிந்து, சம்பந்தப்பட்ட நிறுவனங்களைத் தொடர்பு கொண்டு பணியாளர்களை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

(அ) சரக்கு மற்றும் சேவை வரி உயர்த்தப்படுவதாக வந்த செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

முற்பகல் 11–30

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் சரக்கு மற்றும் சேவை வரி உயர்த்தப்படும் என்ற செய்தி வந்துள்ளது. கடந்த 2 ஆண்டுகளுக்கும் மேலாக ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களெல்லாம் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நிலையில் சரக்கு மற்றும் சேவை வரி மேலும் உயர்த்தப்பட்டால் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் முதலான எல்லாப் பொருட்களின் விலைவாசியும் உயரும், மக்கள்*

பாதிக்கப்படுவார்கள். எனவே, இதுகுறித்து மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்ற பதட்ட நிலை குறித்தும், அதோடு, சரக்கு மற்றும் சேவை வரியை மத்திய அரசு அறிமுகப்படுத்தி, அது நடைமுறைக்கு வந்த நேரத்தில், மாநிலங்களின் வரி வருவாய் பாதிக்கப்படக்கூடும் என்ற அடிப்படையில், மாநிலங்களுக்கு வழங்கப்பட்டு வந்த பங்களிப்புத் தொகை இந்த ஆண்டு நிறுத்தப்படும் என்ற நிலையில், மாநிலங்களுக்கான, குறிப்பாக, தமிழ்நாட்டிற்கு வருவாய் குறையும் என்ற நிலை குறித்தும் அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன், திரு. தி. வேல்முருகன் ஆகியோர் தற்போதுதான் இதுகுறித்து என்னுடைய கவனத்திற்கு அறிவிப்பு தந்திருக்கின்றார்கள். மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, GST பற்றிய சில கருத்துகளை இந்த மாமன்றத்தில் நான் பதிவு செய்ய விரும்புகின்றேன். ஏனென்றால், இன்று, ஒரு மணி நேரத்திற்கு முன்புதான் உறுப்பினர்களுடைய கோரிக்கை என்னிடம் வரப்பெற்றது. அதனால், அதற்கான விரிவான அறிக்கையைத் தயாரிப்பதற்கு நேரம் இல்லை. ஆகவே, சில தகவல்களை மட்டும் அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தற்போது நான் கூறிக்கொள்கிறேன். நான் கூறுவது முழுவதும் அரசியலுக்கு அப்பாற்பட்டு, கட்சிக்கு அப்பாற்பட்டு, பொருளாதாரம் மற்றும் ஜனநாயகம் பற்றி மட்டுமே நான் பேசப்போகிறேன். ஆகவே, யாரும் இதைத் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம். ஏனென்றால், அரசியல் என்று பார்த்தால், GST வருவதற்கு முதல் எதிரியாக இருந்தவர், இன்றைக்குப் பாரத பிரதமராக இருக்கின்ற திரு. நரேந்திர மோடி அவர்கள் Gujarat Chief Minister ஆக இருந்த வரை. அதேபோன்று, முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்களும் எதிர்த்திருந்தார்கள். ஆகையால், எல்லோருமே சிலகாலம் அவையில் இந்தப் பக்கத்திலும், அந்தப் பக்கத்திலும் இருந்து பேசியவர்கள்தான். ஆகவே, இதில் அரசியலே பேச வேண்டாம். வெறும் பொருளாதாரம் மற்றும் ஜனநாயகம் பற்றித்தான் பேசுகிறேன்.

இந்த வரியை உருவாக்கும்போது, 2 குறைகள் இருந்தன. முதல் குறை, மாநிலங்களுடைய வரி வகுக்கும் உரிமைகள்,

2022 ஏப்ரல் 19] [முனைவர் பழனிவேல் தியாக ராஜன்]

ஏற்கெனவே Direct tax–ல் எந்த உரிமையும் மாநிலங்களிடம் இல்லை. Indirect taxes ஆக உள்ள மதிப்பீட்டு வரி, Sales tax ஆகியவைதான் மாநிலங்களின் கையில் இருந்தன. இதை ஒரே ஒரு குழுவால், ஒரே ஒரு இடத்தால் வகுக்க, system–ஐ மாற்றினால் மாநிலங்களின் வரி விதிக்கும் உரிமைகள் பறிக்கப்படும் என்ற ஒரு பிரச்சினை முதலிலே இருந்தது. இரண்டாவது, அவசர, அவசரமாக இதைச் செயல்படுத்தியதனால், இதில் பல செயல் விளைவுகள் வரும் என்ற அச்சம் இருந்தது. இதைப் பற்றி பலரும் கூறினார்கள். நான்கூட ஒரு National Newspaper ஆன Hindustan Times–ன் Mint Newspaper–ல் ஒரு கட்டுரைமூலம் கூறியிருந்தேன். அதற்கேற்ப, கிட்டத்தட்ட ஐந்து வருடங்களான பிறகு, வரி வருவாய் எதிர்பார்த்த அளவிற்கு வரவில்லை. அந்த வரியை ஒருமைப்படுத்தியதனால், homogenization–னால் One Nation, One Tax ஆல் வரக்கூடிய வளர்ச்சியும் வரவில்லை. பேரிடர் ஏற்படும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை என்பதை ஒருபுறம் சொல்லலாம். ஆனால், பேரிடருக்கு முன்பே இந்தப் பிரச்சினை இருப்பது தெளிவாகத் தெரிந்தது. எப்படியென்றால், Revenue Neutral Rate, அதாவது, மாநிலங்களெல்லாம் அவர்களுடைய தனித்தனி Sales Tax, VAT செய்துகொண்டிருந்தபோது, Effective Tax Rate, Indirect taxes–ல் சுமார் 15 சதவீதம் இருந்தது. ஆனால், ஒரே நாடு, ஒரே GST என்று வந்த பிறகு, Effective Tax Rate உற்பத்தியில் 11.4 சதவீதமாக சரிந்துவிட்டது. ஆனால், எல்லா அரசாங்கங்களுக்கும், அதாவது ஒன்றிய அரசாங்கத்திலிருந்து அனைத்து மாநில அரசாங்கங்களுக்கும் இதனால் நஷ்டம், இழப்பு ஏற்பட்டுவிட்டது என்ற ஒரு தெளிவான கணக்கு RBI–யிடமிருந்தும், பல இடங்களிலிருந்தும் வந்துவிட்டது.

இதைத் திருத்தும் வகையில், GST–ஐ உருவாக்கியவுடன், 5 வருடங்களுக்கு ஒவ்வொரு மாநிலத்திற்கும், முந்தைய ஆண்டைவிட, இந்த ஆண்டு Sales tax, GST மூலம் வரி வருவாயில் 14 சதவீதம் வளர்ச்சி வரவில்லையென்றால், அதை ஒன்றிய அரசாங்கம் தனியாக GST Cess என்ற ஒரு charge–ஐ தீட்டி, அதில் வருகின்ற நிதியை வைத்து இதற்கான compensation 14% வரை கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அது சில ஆண்டுகளில் சில மாநிலங்களுக்குத் தேவையில்லாமல் இருந்தது. ஆனால், 2–வது, 3–வது ஆண்டுக்குள் அது பல மாநிலங்களுக்குத் தேவைப்படும் நிலை வந்துவிட்டது. ஏனென்றால், 14% growth வரவில்லை. இதற்கான வரலாற்றை நாம் சொல்ல வேண்டுமென்றால், எப்போது

[முனைவர் பழனிவேல் தியாக ராஜன்] [2022 ஏப்ரல் 19

Sales tax–ம், VAT–ம் மாநிலங்களுடைய control–ல் இருந்ததோ, குறிப்பாக 2006–லிருந்து 2014 வரை, ஆட்சிக்கு அப்பாற்பட்டு, Sales tax ஆண்டுக்கு 12%, 15%, 16% வரை வளர்ச்சியடைந்திருக்கிறது. ஆனால், அதற்குப் பிறகு, குறிப்பாக, GST வந்த பிறகு இந்த வரி வருவாய் வளர்ச்சியடையவில்லை. இதில், பல பிழைகள் இருந்ததனால், அனைத்து மாநிலங்களும், அனைத்து GST Council உறுப்பினர்களும் இரண்டு முக்கியக் கோரிக்கைகளை வைத்தனர்.

முற்பகல் 11–35

ஒன்று, Compensation–ஐ 5 வருடங்களுடன் முடிக்காமல் கூடுதலாக நீட்டிக்க வேண்டும் என்பது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, அவரே டெல்லிக்கு வந்தபோது ஒன்றிய நிதியமைச்சரைப் பார்த்து அதை நீட்டிப்பதற்கு கூறியிருக்கிறார். மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கும் கடிதம் எழுதியிருக்கிறார். இதை அனைத்து இடங்களிலும் சொல்லியிருக்கிறார்கள். இது அனைத்து மாநிலங்களுடைய கோரிக்கை. இரண்டாவது பிரச்சினை; அந்த GST Council–னுடைய செயல்பாட்டை இன்னும் சிறப்பிக்க ஒரு தேவை இருக்கிறது. முதன்முதலாக நான் அமைச்சரானவுடன் ஜூன் மாதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுப்பினராக என்னை நியமித்தவுடன், நான் ஒரு நீண்ட அறிக்கையை எழுதி, இதில் என்னென்ன பிழைகள் இருக்கின்றன என்பதைக் காண்பித்தேன். இப்போது என்ன சூழ்நிலை என்றால், இந்த வரியை எப்படியாவது திருத்த வேண்டும். இந்த ஜூன் 30 உடன் இந்த compensation நிற்கப் போகிறது. இதுவரையிலும் நமக்கு வருகிற தகவல் அதை நீடிக்கிறமாதிரி ஒன்றிய அரசு எந்தப்புறமும் திசை பார்க்கவில்லை என்றுதான் தெரிகிறது. இப்போது என்ன பிரச்சினை என்றால், ஒவ்வொரு மாநிலத்திற்கும் பல ஆயிரம் கோடி ரூபாய் வருமானம் குறையும். சென்ற இரண்டு வருடத்திற்கு compare செய்யும்போது இந்த வருடத்திற்குக் குறையும். அதைச் சீர்திருத்தும் வகையில் GST Council மூலமாக செப்டம்பர் மாதத்தில் லக்னோவில் கூட்டப்பட்ட கூட்டத்தில் இரண்டு குழுக்களை உருவாக்கினார்கள். ஒரு குழு நிலைக் குழு; Standing Committee; அந்தக் குழுவினுடைய கடமை, சீர்திருத்தம்– Systemic Reforms, சீர்திருத்த Committee. அதில் என்னை உறுப்பினராக நியமித்திருக்கிறார்கள். ஒன்றிய நிதியமைச்சர் அவர்கள் நான் கேட்காமல் என்னை அவர்களாகவே உறுப்பினராக நியமித்திருக்கிறார்கள். இன்னொரு Committee;

2022 ஏப்ரல் 19] [முனைவர் பழனிவேல் தியாக ராஜன்]

Rate Rationalisation Committee; எப்படி இந்த effective rate–ஐ 11.4 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகிதத்திற்குக் கொண்டு போவது, அதற்காக ஒரு Sub Committee, இந்த GST Council–ல். அந்த Committee–ல் நான் உறுப்பினர் இல்லை. 7, 8 வேறு மாநிலங்களின் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இதுவரையிலும் அந்த Committee–யினுடைய எந்த அறிக்கையும் GST Council–இடம் பகிர்ந்துகொள்ளப்படவில்லை. Actual–ஆக அந்த Committee–ஐ செப்டம்பரில் அறிவிக்கும்போது, 3 மாதங்களுக்குள் GST Council–க்கு ஓர் அறிக்கையைத் தர வேண்டுமென்கிற terms of reference–ல்தான் அந்த Rate Rationalisation Committee உருவாக்கப்பட்டது. ஆனால், இதுவரை GST Council கூட்டமும் கூடவில்லை. அதுபோன்ற ஓர் அறிக்கையும் வரவில்லை. இது ஒரு தனி அம்சம் இல்லை. இந்த GST Council–னுடைய வரலாற்றில் இதுபோன்று நிறைய நடந்திருக்கிறது. நான் ஓர் உதாரணம் சொல்கிறேன்; ஜூன் மாதத்தில் நான் உறுப்பினரானவுடனே Committee on Gaming, Horse racing and Casinos என்ற Committee உருவாக்கப்பட்டு, அந்த Committee 6 மாதங்களுக்குள் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டுமென்று கூறப்பட்டது. 10 மாதங்களாகிவிட்டன. 10 மாதங்களில் அந்த கமிட்டி ஒரு கூட்டம்கூட இதுவரை கூட்டவில்லை. எப்படி 6 மாதத்திற்குள் அறிக்கையைக் கொடுக்க முடியும்? இதை நான் ஒன்றிய அமைச்சரிடம் GST Council–ல், டெல்லியில் கூறியிருக்கிறேன். அதனால் எத்தனையோ வதந்திகள் வந்து கொண்டிருக்கின்றனவே தவிர, இதிலே இரண்டு தெளிவான கருத்துகள் எல்லோருக்கும் தெரிய வேண்டும். இன்றைக்கு வருமானம் குறைவாகத்தான் வருகிறது. ஒன்றிய அரசாங்கமும், GST Council–லும் அதைத் திருத்தியே ஆக வேண்டுமென்ற எண்ணத்தில் இருக்கிறது. அதேசமயம், compensation–ஐ நீடிப்பதற்கு எந்தவகையிலும் வழிசெய்கிறமாதிரி எனக்குத் தெரியவில்லை. இதனால் வதந்திகள் வருவதைத் தவிர்க்கும்வகையில், நாங்கள் இன்னொரு முறை உறுப்பினர்களின் கேள்விக்கேற்ப ஒன்றிய அரசாங்கத்திற்கும், நிதித் துறைக்கும், GST Council–க்கும் நான் இன்றைக்கு அல்லது நாளைக்குக் கடிதம் எழுதி, இந்த வதந்திகளையெல்லாம் நிறுத்தும்வகையில், ஒரு தெளிவான அறிக்கை வெளியிடுங்கள் என்று கேட்டுக்கொள்ள இருக்கிறேன். இதுதவிர, தகவல் என்னிடம் இல்லை; அதனால் ஏதும் கொடுக்க முடியவில்லை.